956

உ

பார்புகழும் பரமநாதன் துணை.

# பக்திவிஜய கீதாமிர்தம்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
14 FEB 1933
MADRAS

கிளையூர்,

A. S. பாலசுந்தரம் அவர்கள்

இயற்றியது.

...ா பிரஸ், மதுரை.

1932. [ அணா 2.

Q2:417
N32.
120182

உ

பார்புகழும் பரமநாதன் துணை.

உறங்காம்பட்டி, போர்டுஸ்கூல் ஹெட்மாஸ்டர்

V. துரைசாமிதாஸ் அவர்களால்

சீர்திருத்தம் செய்யப்பட்டு

கிளையூர், A.S. பாலசுந்தரம் அவர்கள்

இயற்றிய

# பக்திவிஜய கீதாமிர்தம்.

(சாற்றுக்கவி.)

வெண்பா.

தூர்க்கழையின் ருசிபோன்றே சொல்பவர் கண்ணுவினிக்கும்
பார்க்குளயன் மனைபண்போற் பாவிக்கும்—மார்க்கமிகு
தாலமதிற் புகழோங்கும் சத்துவ ஜீவாபிரகாம்
பாலசுந்தரம் அருட் பா.

ஐயா பழனிமலை வேலா—என்றமெட்டு.

---

1. நாதா உன்பாத மறவேனே—நீதி
வேதா உன்உபதேசம் தேனே—பாரில்
ஆதாரம் யார் எனக்குத் தானே—அதை
பகர்ந்திடுவாயே சீ மானே. (நா)

OFFICE OF ... 14 FEB 1933 MADRAS

Q2:417
N32
170182



2. தேவா திருக்கடைக்கண் பாரு—இந்த
ஜெகத்தினில் உன்னையன்றி யாரு—பக்தி
ஜீவானந்த மதனைக் கூறு—ஞானி
திரித்துவதாஸ் மொய்த் தாரு. (நா)

3. நித்தம் உந்தனை நம்பி னேனே—உனின்
சித்தம் வைத்தாதரிப்பாய் கோனே—எனின்
சத்தத்தைக் கேளும் தம்பி ரானே—உந்தன்
பக்தர்களில் யானொருவன் தானே. (நா)

4. அப்பொடு பிரிதிவி ஆ காயம்—என்ற
அற்புத சிருஷ்டியே உ பாயம்—ஐயா
செப்பும் பாலசுந்தரன் வி தாயம்—கவி
திகழ்ந்திடும் பரிமள காயம். (நா)

---

ஆண்டிப்பண்டாரம் உனை வேண்டிக்கொண்டேனே
—என்றமெட்டு.

2052
784.0954

பல்லவி.

சாமி பகவானே உன்னைச்சரணம் செய்தேனே தினமே (சா)

அநுபல்லவி.

சாக்ஷாதி தேவா நீயே சக்ஷிதானந்த மாயே
மோக்ஷ கதியளித்து மோசமின்றி காத்தருளும் (சா)

1. எங்கும் நிறைந்த கோமான் எவரும் புகழும் சீமான்
அங்கம் மறைந்த பூமான் அருகில் வருவாய் ஆதிமூலா (சா)

2. ஆவிபுடைய கையா அரும்பாவி நான்தானையா
மேவியடைந்தேன் மெய்யா மேலுலகம் தாருமையா (சா)

3. சங்கம் முழங்கும் ஜீவா சத்ய சுந்தர தேவா
பங்கம் வராமல் தினம் பாரிலென்னை பார்க்கவாவா (சா)

4. கண்ணாலே பார்க்க உன்னை காணமுடியாமலே
எந்நாளுமே நினைத்து ஏங்கி ஏங்கி வாடலாமோ (சா)

5. ஆருமில்லை எனக்கு ஆதரிப்பார் துணைக்கு
வேறுகதியில்லையே விமலோனே உன்சதமே (சா)

6. அந்தரவானோனே அமலாபரக்கியாதிபனே
சுந்தரபாலன் சொல்லை சுகிர்தமொழியாயணைப்பாய் (சா)

---

காமிசத்யபாமா—என்றமெட்டு.

---

பல்லவி.

இந்த கலகமான உலகமதில் சொந்தமே யாரு யாரு
யாரு யாரு (இ)

அநுபல்லவி.

பந்தபாசத்தின் தொல்லை பகர்ந்திட உண்டோ எல்லை
தந்தை தாய் தாரம் மெய்யில்லை இல்லை இல்லை (இ)

சரணங்கள்.

1. காலகண்டனும் நம்மை வேளைகண்டுமே தூக்கும்
நாளை அறியலாகுமோ ஆகுமோ ஆகுமோ (இ)

2. சொந்த உடல் பிரிந்தால் பந்த மனைவி எங்கே
சந்தேக மான வாழ்க்கையே வாழ்க்கையே வாழ்க்
கையே (இ)

3. சொத்து சுகமுமெங்கே கொத்துசாவியு மெங்கே
சத்யவாசகம் கேளுமே கேளுமே கேளுமே (இ)

4. புஞ்சை தோப்புமு மெங்கே நஞ்சை நிலங்களெங்கே
தஞ்சமென்றொரும் காண்கிலேன் காண்கிலேன்
காண்கிலேன் (இ)

5. சொந்தமில்லா உலகம் சுதந்தரமில்லை யென்று
சுந்தரம் கீதம் பாடினேன் பாடினேன் பாடினேன் (இ)

---

## கும்மி.

1. பட்டு புடவை ரவிக்கை மாட்டி யாரும்
இட்டப்படும் சொக்கத்தங்கம் பூட்டி
பொட்டுமே நெற்றியில் இட்டுமே மாதர்கள்
கெட்டு அலைகிறார் ரஞ்சிதமே.

2. கொஞ்சும் குயின்மொழி பஞ்சவர்ணக்கிளி
கொஞ்ச மயக்கமா நெஞ்சிலுண்டு
நெஞ்சம் இணைந்தனை தஞ்சமென்றோர்க்கு நீ
வஞ்சகம் செய்கிற ரஞ்சிதமே.

3. வேசையினால் மிக ஆசைப்பட்டு பெரும்
காசை யிழந்திட்டனந்த கோடி
பாசவலையிலே சிக்கியுமே மாந்தர்
பூசைபுரிகிறார் ரஞ்சிதமே.

4. பெண்ணே பூமணியே கண்ணே என் கனியே
மின்னே பூம்பாதமே என்சதமே
என்னேரமு முன்னை எண்ணிவாடுறேனென்
றுன்னி உரைப்பாரே ரஞ்சிதமே.

5. கண்ணுப்புருவமே பெண்ணு உருவமே
எண்ணும் பருவமே நண்ணும் ரூபமயம்
பெண்ணு சொரூபமே பண்ணும் உபாயமே
எண்ணிலடங்குமா ரஞ்சிதமே.

6. பெட்டையே உன்னாலே வெட்டையரையாப்பு
பட்டே உலகில் தவிப்பாருண்டு
துட்டத்தனம் மூலம் கெட்டுப்படுவதை
எட்டி நிமிர்ந்துபார் ரஞ்சிதமே.

7. தின்று கெட்டவர் யுகத்தில் இல்லை பொருள்
கொண்டு கெட்டவர் ஜெகத்தில் இல்லை
பெண்டாலே கெட்டவர் கோடா கோடி அம்மா
கண்டு மொழி நகர் ரஞ்சிதமே.

8. மண்டல மெங்கும் பார் கண்ணாலே மிக
சண்டாள பாதகம் உன்னாலே
அண்டங் கலங்குதோர் பெண்ணாலே—உன்னை
கண்டு சொன்னே னிதை ரஞ்சிதமே.

9. ஆதலால் மாதரே பாதகி யாகாமல்
சோதனை வேதனைக் காகாமல்
நாதனையே உந்தன் சாதனையால் நிதம்
பாதம் பணிந்து வா ரஞ்சிதமே

10. எப்போதும் மனதில் தப்பவிடாமலே
செப்புங்கவி பால சுந்தரத்தால்
அப்பனருளையே எப்போதுமே நாடி
ஒப்பிவா நெஞ்சினில் ரஞ்சிதமே.

---

என்னக்கொடுமை இங்கிலீஷ் க்கிந்தியா சொந்தமா
—என்றமெட்டு.

---

1. ஆதரிப்பாய் அரும் பாதகனை
ஆதாரம் நீயே என் போதகனே
திரித்துவ சர் வேசா
திரு மூர்த்தி யின் நேசா
திரு மறையின் வாசா
திரும்பிப் பாரேன் (ஆதரிப்பாய்)

2. கோடா கோடி பாவம் கொண்டேன் ஓடி
கொடுமை அடிமை புரிந்தேன் நாடி
படா பாட்டை பட்டேன்
படுங் கொடுமையை நட்டேன்
படுத்தழுந்தியே கெட்டேன்
பார் தாமதமா (ஆதரிப்பாய்)

3. பாதகம் செய்தேன் அதாலே பாவம்
பாரினில் யானே யடைந்தேன் சாபம்
பட்டமரம் போ லானேன்
பரபதம் கா ணேனே

சுட்ட புண்போல் நானே
தொண்டனைக் காரும் கோனே (ஆதரிப்பாய்)

4. தந்தையே நானுந்தன் மைந்தன் அல்லோ
தாதகமான என் வேதாந்தமே
உந்தனின் பாதாரம்
உயர்வான ஆதாரம்
தந்தை மகன் சுந்தரம்
தமிழ்க் கருள் கெம்பீரம் (ஆதரிப்பாய்)

170182
O2:417
N32

---

பழனிநாதன் வரப்பிரமாதன்—என்றமெட்டு.

---

பல்லவி.

கடவுள் ஞானி கருணை வேணி (கடவுள்)

அநுபல்லவி.

காவா பரம பிதாவா பரிமள (கடவுள்)

சரணம்.

1. தரும பரம குரு பரனே
திரு மலரடி யருள் சரணே (கடவுள்)
2. அரு மறைகளை ஒருவா நீயே
திரு முறை களை தருவா நீயே (கடவுள்)
3. சக்தி யுக்தி புத்தி தாவே
முக்தி புரிவாய் நீதான் கோவே (கடவுள்)

4. அந்தி சந்தி உற வாடு
சுந்தரதாஸ் பந்த நீடு (கடவுள்)

---

## நொண்டிச்சிந்து.

---

அட்டாள தேசமெல்லாம்—மாதர்
அட்டகாசம் பண்ணியுமே கெட்டலைகிறார்
பாங்கான பட்டு ரவிக்கை—அதில்
பார்வைக்கு எற்றதான சேலை யுடுத்தி
காதிலே கம்மல் மாட்டி—பின்னும்
கண்களுக் கினிய நறு மலரைச் சூட்டி
செல்லுவாளிந்த லோகம்—அவள்
செழிப்புள்ள ரோமமே ஈராறு பாகம்
சந்தனம் சவ்வாது பூசி—தன்னை
அந்தணர் குலமாகவே எண்ணியவேசி
உருவத்தில் ரதி என்னலாம்—அவள்
சொரூபத்திலமைந்ததோர் செயின் பின்னலாம்
பத்தாவின் பத்தினிபோலே—அவள்
உத்தம தேவியே என்று நித்தம் காட்டுவாள்
அன்னம் போல் நடை நடப்பாள்—அதிலே
சின்ன நடையு மொன்று எண்ணி அடிப்பாள்
ஆளைக்கண்டால் அலுக்கு—மாது
அலுக்கு குலுக்கு மேயே தழுக்கிடுவாள்
ஆங்கார காரியவள்—அண்டை
ஆண் வாடை சென்றால தமாக்கிடுவாள்

பெண்ணை தினம் நேசிப்பாருண்டு—மாந்தர்
கண்ணே என்றனுதினமும் பூசிப்பாருண்டு
கெட்டுப் போன மாந்தரே கோடி—உயிர்
விட்டுப் பிரிந்தாருலகில் மங்கையை நாடி
ஆதலா லென் ஆண்மக்களே—பெரும்
பாதகம் செய்திடாமல் திரும்பு மக்களே
இந்தக் கவி சாற்றிடுங்கள்—பால
சுந்தரக் கவியை என்றும் போற்றிடுங்கள்.

---

தாரணியில் அன்புகொண்ட தங்கையைக் காணேன்
—என்ற மெட்டு.

---

பாரிலெனை பரம நாதனே பார்த்திரங்காயோ
பார்த்திரங்காயோ நான்
வேர்த்தியங்குறேன் (பாரிலெனை)

1. எல்லாவித பாவத்தாலே
பொல்லாத பாவி மேலே
இல்லாத கோபம் வைத்தால் நல்லதாகுமோ
நல்லதாகுமோ நான்
பிள்ளை ஆகுமே (பாரிலெனை)

2. செட்டிராத பாவக் கன்மம்
செய்து வந்த பாவ ஜென்மம்
உய்யவழியை யறியா பையனுனேனே
பையனுனேனே பெரும்
பொய்யனுனேனே (பாரிலெனை)

3. பஞ்ச மா பாதகன் நான்
மிஞ்சும் பாதகம் செய்தால்
கெஞ்சும் பாவி எனக்கு தஞ்சம் நீ அல்லோ
தஞ்சம் நீ அல்லோ என்
தஞ்சம் நீ அல்லோ (பாரிலெலே)

4. செப்பும் பால சுந்தரம்
சொற்ப அற்ப கவிக்கு
அப்பா இப்போ இரங்கி ஆசிர்தாருமே
ஆசிர் தாருமே மனம்
வீசிக் காருமே (பாரிலெலே)

---

சுருளிமலே மீதுமேவும் சீலா—என்றமெட்டு.

---

1- மாதரே உன்னே நம்பியாரும்—மனு
காதல் கொண்டு அலேவோரை பாரும்—புவி
மங்கைகளே உங்களாலே எங்குமே அடைகிறரே
பங்கம்—ஆண்—சிங்கம்.

2. பட்டு புட ரவிக்கை மாட்டி—மிக
பட்டு மெட்டு துணிகளே பூட்டி—மனு
கெட்டுமிக தட்டலேய விட்டு விட்ட மாதரின்
வேலே—தின—வேலே.

3. மானிலம் தன்னிலான ஞானி—எல்லாம்
மேனி குறைய வைத்தாயோ நீ—உனின்

தேனி மொய்த்த மலர் கூந்தல் பேணிவைத்தி டாமல் எம்மை
ஏய்க்கே—வரும்—நோய்க்கே.

4. பட்டு பட்டாடைகளை எடுத்தாய்—இன்னும்
பட்டுசட்டை உடலில் தொடுத்தாய்—மாந்தர்
கெட்டு உன்னிலே யழுந்த மெட்டு நடை எனதிகம்
படித்தாய்—மிக—நடித்தாய்

5. அங்கம் குலுங்க காதில் தங்கம்—அதால்
எங்கு மிலங்குதே உன்னங்கம்—இரு
கொங்கை அநிமதில் களும் துங்க மயமாக வோங்கும்
தீங்கு—இதை—நோங்கு

6. வேசை மேலாசை வைத்த மாந்தர்—கோடி
காசை இழந்திட்டார னந்தர்—அவர்
பாச வலையிலே சிக்கி மோசமாவதையே நோக்கி
பாரும்—இனி—கூறும்.

7. காம வேட்கையினுலே மாதே நீ
சாமங்களிலேயே பண்ணும் சூதே—அந்த
பாமலடிகளினுலே பாலர்களும் தோளர்களும்
கெட்டார்—உயிர்—விட்டார்

8. விந்தை விகடகவி அல்லவே—இதை
சிந்தையினிலே உகந்து உள்ளமே—பால
சுந்தரம் கூறு மொழியை தந்திரமாயாக்கிடவே
பாரும்—தினந்—தோறும்.

---

170182

தசரத ராஜகுமாரா—என்றமெட்டு.

---

1. அண்டம் புகழும் எந்தன் ஆண்டவா—எனைமீண்டவா
எனை ஈன்றவா—அருள் ஆண்டவா
அண்டங் கண்டங்களெல்லாம் கண்டு கொண்டவா
அண்டந் திரண்டா லெனில் நின்று மீண்டவா
சண்டாள பாவி எனை என்றும் ஆண்டவா
கண்டேன் கருணை உனில் உண்டே மிக கண்டேன்
எனை நன்றே கார் இன்றே. (அண்டம்)

2. அம்பரா உம் பாதமே நம்பினேன்—தினம் நம்பினேன்
அரும் அம்பிகா—தினம் நம்பினேன்
அம்பரா உம்பாதமே நம்பினேன் நிதமே
வம்புகள் தனையிட்டு வெம்பினேன் நிதமே
தெம்புகளாலே கெட்டு தேம்பினேன் சதமே
அம்பரா ஆருமில்லை மானே இனிதேனே
அருங்கோனே—உனைக்காணேன் (அண்டம்)

3. அந்தரவானின் எந்தன் சுந்தரா—சொந்த
சுந்தரா—அருஞ் சுந்தரா பெரும் சுந்தரா
தந்தையே உனையே மைந்தனுன் தேடி
சிந்தையோ டுந்தன் பாதம் விந்தையாய் நாடி
சுந்தரக் கவியாக உந்தனை தேடி
வந்தேன் பாலசுந்தரம் பாடி—இதுமோடி
உனைதேடி—தினம் நாடி (அண்டம்)

---